செய்தி வெளியீடு எண்.003 நாள். 3.1.2008

# 238 கோடியே 40 இலட்ச ரூபாய் நிதியுதவியில் நலிவுற்ற 1192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வலுவூட்டும் திட்டம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 3.1.2008 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வலுவூட்டும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் தற்போது 4474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 1192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நலிவடைந்த நிலையில் உள்ளன. இவற்றை வலுப்படுத்தி இந்த வங்கிகளின் சொந்த வருமானத்தைப் பெருக்கும் வகையில் இந்த அரசு ஒரு சீரிய திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1192 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக தலா 20 இலட்சம் ரூபாய் காசுக் கடனாக வழங்கப்படும். இந்நிதியை இவ்வங்கிகள் பொது மக்களுக்கு கடன் வழங்க பயன்படுத்தும். இது போன்ற நகைக்கடன் வழங்குவதால் இவ்வங்கிகளுக்கு ஆண்டொன்றுக்கு 2 சதவிகிதம் வட்டி விகித விளிம்பாக 40 ஆயிரம் ரூபாய் மட்டுமே வருமானமாகக் கிடைக்கும். ஆனால், இத்திட்டத்தில் வங்கிகளின் வட்டி வருவாயை அதிகரிக்க ஏதுவாக, இந்த வங்கிகளுக்குத் தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு, ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வட்டி மான்யமாக பெற வாய்ப்பு ஏற்படும். இதன் பயனாக, இவ்வங்கிகள் ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றிற்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வட்டி வருவாய் கிடைக்கும். இதன் மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தமது நடைமுறைச் செலவுகளைச் சரிகட்டுவதுடன் தமது வணிகத்தையும் மேலும் பெருக்கிக் கொள்ள இயலும். அடுத்த நான்காண்டுகளில் இவ்வங்கிகளின் கடன் நடவடிக்கைகள் மேம்பட்டு ஒவ்வொரு வங்கியும் ஆண்டொன்றிற்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வழங்கும் வகையில் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் கூட்டுறவு இயக்கத்தில் நலிவுற்ற வங்கிகள் அனைத்திற்கும் புத்துயிர் ஊட்டப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (3.1.2008) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஏர்வாடி, ஒன்பத்துவேலி, நார்த்தாங்குடி, ஆனதாண்டவபுரம், புதுச்சத்திரம், பிச்சாவரம், ஏதுமலை, வெள்ளூர், பொன்விளைந்த களத்தூர், படாளம், இலுப்பூர் மற்றும் பேரண்டூர் ஆகிய 12 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார். மற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அந்தந்த மாவட்டங்களில் உரிய அலுவலர்கள் மூலம் நிதியுதவி வழங்கப்படும். இதன் மூலம் 238 கோடியே 40 இலட்சம் ரூபாய் கடன் பெற 11 கோடியே 92 இலட்சம் ரூபாய் வட்டி மான்யமாக வழங்கப்படும்.

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.